செ.வெ.எண்: 510/2023 நாள்: 04.09.2023

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் உதவி இயக்குநர் மேட்டூர் அணை அலுவலகத்தில் காலியாக உள்ள ஊர்தி ஓட்டுநர் பணியிடத்தினை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. செ. கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் உதவி இயக்குநர் மேட்டூர் அணை அலுவலகத்தில் காலியாக உள்ள ஊர்தி ஓட்டுநர் பணியிடத்தினை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் மேட்டூர் அணை அலுவலகத்தில் காலியாக உள்ள ஒரு ஊர்தி ஓட்டுநர் பணியிடத்தினை நிரப்ப பொது போட்டி (முன்னுரிமை பெற்றவர்) பிரிவில் தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறிப்பாக, நாளது தேதியில் தகுதியுள்ள இலகுரக வாகன ஊர்தி ஓட்டுநர் உரிமத்துடன் (Light Vehicle Driving Licence) மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒரு வருடத்திற்கு குறையாமல் ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப்பில் சிறிய பழுதுகள் போன்றவை சரி செய்தல் பணியில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இத்தகுதிகளை தகுதி தேர்வு மற்றும் நேர்காணலில் பரிசோதனை செய்யப்படும்.

இனசுழற்சியானது 1) OC – General – Priority என்ற முறையில் பின்பற்றப்படும். மேலும் 19500 - 62000 நிலை-8 என்ற சம்பள ஏற்ற முறையில் ஊதியம் வழங்கப்படும். வயது வரம்பை பொறுத்த மட்டில் 01.07.2023 அன்று உள்ளவாறு ஊர்தி ஓட்டுநர் பதவிக்கு தேர்வு செய்யப்படுவோருக்கு SC/ST வகுப்பினர் 37 வயதும், MBC/BC வகுப்பினர் -34 வயதும், OC வகுப்பினர் -32 வயது உட்பட்டவராக இருக்க வேண்டும்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் மேட்டூர் அணை அலுவலகத்தில் அலுவலக வேலை நேரங்களில் நேரில் அணுகி விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் ஆதார் அட்டை நகல், கல்விச் சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், ஜாதி சான்றிதழ் நகல், ஊர்தி ஓட்டுநர் உரிமம் நகல், 3 ஆண்டுகள் ஊர்தி ஓட்டுநர் அனுபவ சான்று, ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப்பில் பயிற்சி பெற்றமைக்கான சான்று நகல் மற்றும் 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பத்தினை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், மீன்துறை வளாகம், பூங்கா அருகில், கொளத்தூர் சாலை, மேட்டூர் அணை - 636404, தொலைபேசி எண்:04298- 244045 என்ற முகவரிக்கு 18.09.2023 பிற்பகல் 5.00 மணிக்குள் கிடைக்கதக்க வகையில், விண்ணப்ப உறையின் மேல் "ஊர்தி ஓட்டுநர் பணியிடத்திற்கான விண்ணப்பம்" என எழுதி அனுப்பிட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

IPROSalem PRO Salem pro.slm PRO Salem